உ

சிவமயம்

# திருவாலங்காடு

(தல வரலாறு)

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 436846)
TIRUPPUDVAGA MADAM
8045
Q1:38
384
32/1

எழுதியவர் :

கோவைகிழார்

சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை, சென்னை
1941

1428

## பதிப்புரை

இச்சிறுநூல் இந்துமத அறநிலயப் பாதுகாப்புக் கழகத்தார் சுற்றறிக்கையின் பயனாக ஆக்கப்பட்டது. அச்சுற்றறிக்கைக்குக் காரணமாயவர் திருவாளர் - ராவ்பகதூர் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B. A., B. L., F. R. G. S. அவர்களாகும். இத்தகைய நூல்கள் பல வெளிவந்தமை கண்ணுற்று, அவை யாவும் திருக்கோயில்களின் உண்மைப் பொருள்களைப்பற்றிக் கூறுவனகண்டு, திருவாலங்காட்டுக்கும் அத்தகைய நூல் இன்றியமையாதது என்று கருதி, திருவாளர்-கோவைகிழார் நல்லுதவியால் இந்நூல் வெளிப்படுத்தப்பட்டது. பல அன்பர்களுக்கும் இது பேருதவியாகும். இந்நூலை எழுதித்தந்த திரு. கோவைகிழார்க்கு எனது மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

திருவாலங்காடு
10—8—41

G. துரைசாமி நாயுடு,
நிர்வாக ஆட்சியாளர்
கார்வேட்டு நகரம் எஸ்டேட்டு.

உ

சிவமயம்

# திருவாலங்காடு

## (தல வரலாறு)

இது மிகப் பழைய தலம். தொண்டை மண்டலத்தில் உள்ள பாடல்பெற்ற சிவத் தலங்கள் முப்பத்திரண்டனுள் ஒன்றும். சைவ சமயாசாரியர் மூவராலும் பாடப்பெற்ற சிறப்புடையது. மேலும் காரைக்காலம்மையார் எனப் பெரும் புகழ்பெற்ற மூதாட்டியாரின் திருப்பாடல்களையும் பெற்றது. நடராசப் பெருமானின் பஞ்ச சபைகளில் இஃது ஒன்றுகும். இங்குள்ள சபைக்கு இரத்தின சபை என்று பெயர். இங்குப் பெருமான் ஆடின தாண்டவத்திற்கு ஊர்த்துவ தாண்டவம் என்று பெயர். தமிழ் நாட்டில் காடென்ற பெயர்கொண்ட பல சிவத்தலங்கள் உள்ளன. அவை மறைக்காடு, வேற்காடு, சாய்க்காடு, வெண்காடு, காரைக்காடு, தலைச்சங்காடு, என்பன. அவைபோல இத்தலமும் ஆலங்காடென வழங்குகிறது. இதனல் பண்டைக்காலத்து இத்தலம் ஆலமரம் நிறைந்த காடாக இருந்ததென அறியலாம். இதற்கு வடமொழியில் வடவாரண்யம் என்று பெயர். (வடம் - ஆலமரம் ; ஆரண்யம் - காடு.)

இங்கே திருக்கோயில் கொண்டெழுந்தருளும் சுவாமியின் பெயர் : ஆலங்காட்டடிகள் (வடாரண்யேசு

வரர்). அம்மையின் பெயர் : வண்டார் குழலியம்மை. தீர்த்தம் : முத்தி தீர்த்தம். தலமரம் : பலா. இந்த ஊர் இப்பொழுது சித்தூர் ஜில்லாவைச் சேர்ந்தது. சென்னை-அரக்கோணம் இருப்புப் பாதையில் சென்னையிலிருந்து 37 கல்தூரத்திலும், அரக்கோணத்திலிருந்து 6 கல் தூரத்திலும் திருவாலங்காடு என்ற இருப்புப்பாதை நிலையத்திலிருந்து 3 கல் அளவிலும் இத்தலம் உள்ளது. இரயில் அடியில் மாட்டு வண்டிகள் கிடைக்கும். ஊர் அடைதற்கு ஒரு மணி நேரம் ஆகும். ஊரில் தங்குவதற்குச் சத்திரங்கள் பல உள.

ஊர் விசாலமாகக் கட்டப்பட்டுள்ளது. சந்நிதித் தெரு மிகவும் அகலமாகவும் கம்பீரமாகவும் இருக்கிறது. ஆலய முதல் தேரடி வரையில் கால்கள் இருக்கும். தேர்வீதி, அதற்கு இருபுறங்களிலும் விசாலமாக இருக்கிறது. ஊருக் கருகில் நீர்க் குட்டைகள் உண்டு. ஆலயத்திற்கு மேற்கில் உள்ள முத்தி தீர்த்தம் பெரிதாக இருக்கிறது. அருகில் இலுப்புத் தோப்புகள் பல உண்டு. இவ்விதச் செழிப்புகளைக் கொண்டது இத்தலம்.

**ஆலயம்** :—ஆலயம் மிகப் பெரியது. சுற்றுமதில் ஒரு கல் அளவு நீளம் இருக்கும். அது விஜய நகரத்தார் காலத்தில் கருங்கல்லால் கட்டப்பட்டது. அதற்குச் சான்று அதைச் சுற்றிலும் பொறிக்கப்பட்டுள்ள வராகம், வாள், சூரிய சந்திரர்கள் என்ற நரபதிகளின் சின்னங்களே. முகத்துவாரத்தில் கோபுரம் இல்லை. ஆனால் பஞ்ச மூர்த்திகளின் உருவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தெற்கிலும் வடக்கிலும் இருந்த துவாரங்களை இப்போது அடைத்திருக்கிறார்கள். உட்புறத்துத் துவாரத்தின் மேல்பரப்புக் கல்லில் ஒரு புறம், ஒரு பசு லிங்கத்

தின்மீது பால்சொரிவது போலவும், மற்ருெரு புறத்தில் காமதேனு லிங்கத்தைப் பூசிப்பது போலவும் உருவங் கள் செதுக்கப் பெற்றிருக்கின்றன. ஆலயத்திற்கு முன் புறத்தில் சந்நிதி தெருவில் 16 கல் மண்டபமும் ஒன்று இருக்கிறது. அதற்கு முன்ஞல் 8 மூலே மண்டபம் அழிந்து போய்விட்டது. வெளிமதிலுக்கு உட்புறத்தில் பெரிய கோபுரம் இருக்கிறது. இதனேச் சமீபத்தில் திருப் பணி செய்துள்ளார்கள். வடபுறத்தில் 100 கால் மண்ட பம் இருக்கிறது. இதனேச் சாமான் வைக்குஞ் சாலேயாக வும் தேவஸ்தானக் காரியாலயமாகவும் பயன்படுத்திக் கொண்டிருக்கிருர்கள். எதிரே தெற்கில் வாகன மண்ட பம் இருக்கிறது. அதற்கு உட்புறத்தில் ஒரு மதிலும் சிறு கோபுரமும் இருக்கின்றன. அதன் உட்புறத்தில் நாட்டுக் கோட்டையார் புதுப்பித்த திருப்பணிக் கோயிலேக் காண லாம். சுவாமியின் ஆலயம் முடிவுபெற்றுக் கும்பாபிஷே கம் ஆனவுடன் வேலே நின்று விட்டது. அம்மன் ஆலயம் திருப்பணி தொடங்குமுன் வேலே நின்று விட்டது. அதற்கு வைத்த தொகையும் விவகாரத்தில் நின்றிருக் கிறது. ஆலயம் சுத்தமாகவும் பெரிதாகவும் கட்டப்பட் டிருக்கிறது. கல்வெட்டுகள் சேமித்து வைத்திருப்பது ஒரு சிறந்த செயல். மூலத்தானம் இரத்தின சபை இரண்டும் காணத்தக்கவை. சபைக்கு முன்மண்டபத்தில் பழைய சிற்பத்தூண்கள் முன்னிருந்தபடியே பயன்படுத் தப் பட்டன. சிற்சபைக்குமேல் தாம்பிரத் தகடு வேய்ந்த முகடு இருக்கிறது. சிதம்பரத்தில் கனக சபையைப் போன்ற வடிவு அமைந்தது. உள்ளிடத்தில் பாதிபாகம் சுவரால் தடுக்கப்பட்டுள்ளது. அதன் இரகசியம் தெரிய வில்லே. நடராசர் கால்தூக்கி ஆடும் நிலேயில் இருக்கிருர். எதிர்ப்புறத்தில் சிறிது மேற்கே ஒதுங்கியுள்ளதாகச்

காளி உருவம் இருக்கின்றது. அந்த உருவமும் கால் அகற்றி ஆடும் நிலையில் ஐதீகத்திற் கேற்றபடி உள்ளது. அடுத்திருக்கும் உற்சவ மண்டபத்தில் பஞ்சமூர்த்திகள், காளி, காரைக்காலம்மை, முஞ்சிகேசுரர், கார்க்கோடர் முதலிய உற்சவர்கள் அமைக்கப்பட்டிருக்கிறார்கள். உட் பிரகாரத்தில் அறுபத்துமூவர் இல்லை. ஆனால் நால்வர், இருடிகள், காரைக்கால் அம்மையார் இவர்களின் மூலவர்கள் உண்டு. அர்த்த மண்டபத்தில் சாதாரண நடராசரைச் சமீபத்தில் செய்து வைத்திருக்கின்றனர். திருப்பணி நடந்த காலத்தில் நிலத்தின்கீழ் அதைப் போன்ற நடராசர் உருவங்கள் கிடைக்க அவைகளைச் சென்னைக் கண்காட்சிச்சாலைக்கு எடுத்துச் சென்றதனால் இங்கே இவ்வுருவம் வைக்கப் பெற்றதாம். கருப்பக்கிருகத்தில் வேறுபாடு ஒன்றும் இல்லை. மூலத்தானம் அழகான மூர்த்தி. அம்மன் ஆலயந் தெற்கு நோக்கியது. முன்னிருந்த நிலையில் இருக்கிறது. உருவம் நடுத்தரமானது.

**ஐதீகங்கள் :—**இத்தலம் முன்காலத்தில் ஆலமரங்கள் நிறைந்த வனமாக இருந்தது. அங்கே ஆதிசேடனுக்குத் திருமால் உபதேசஞ் செய்தார். சுந்தரர் உபதேசஞ் பெற்றார். முஞ்சிகேச முனிவர், கார்க்கோட முனிவர் இவர்கள் வழிபட்டார்கள். அவர்களுக்காக சிவபிரான் நடனஞ் செய்து ஆனந்தக்கோலங் காட்டினார். இவ் வனத்தில் காளி ஆதியில் ஆண்டுவந்தனள். காளிக்கும் நடராசருக்கும் நிருத்தம் செய்வதில் போட்டி ஏற்பட்டது. நடராசர் ஊர்த்துவ தாண்டவம் புரியவே காளி நாணமுற்றுத் தோல்வி யடைந்தனள். தேவர்கள், சேடன்,கிராதன், சோமசாமி முதலியவர்கள் துதிசெய்து

வழிபட்டது. இவை முதலான பல ஐதீகங்கள் இத்தலத்தில் ஏற்பட்டன எனப் புராணங்கூறும்.

இவ்வைதீகங்களில் முஞ்சிகேச கார்க்கோட முனிவர்களுக்கு நடனகோலம் காட்டினது முக்கியமானது. தில்லையில் பதஞ்சலி, வியாக்கிரபாதர் எப்படியோ, திருப்பேரூரில் பட்டிமுனி, கோமுனி எப்படியோ அப்படியே இங்குக் கார்க்கோட, முஞ்சிகேச முனிவர்கள் ஏற்பட்டிருந்தார்கள். அவர்களுடைய மறு பிறவிகள் என்றுஞ் சொல்வதுண்டு. அம்முனிவர்கள் நெடுங் காலந் தவம்புரிந்து வழிபட அவர்களுக்காக ஈசன் ஆனந்த நடனம் புரிந்தார். அதனல் இச்சபை பஞ்சசபைகளுள் ஒன்ருகிறது. இதனை மணியம்பலம் (இரத்தின சபை) என்பர். ஏனைய சபைகளாவன : தில்லை - பொன்னம்பலம், மதுரை - வெள்ளியம்பலம், திருநெல்வேலி - தாம்பிரவம்பலம், குறும்பலா (குற்ருலம்) - சித்திர அம்பலம் என்பன. அவ்விதம் ஆடிய கூத்துக்களில் இங்கு ஆடிய கூத்து கால்தூக்கி ஆடின சிறப்புடையது. அது ஊர்த்துவ தாண்டவ மெனப்படும். இதற்குக் காரண மென்னவெனில், காளி கூத்தாடுவதில் தான் சிறந்தவள் எனக் கர்வித்திருந்தாள் ; நடராசர் அவளுடைய கர்வம் போக்குதற்காக எண்ணினர் ; இருவரும் நடனஞ் செய்து நிருத்த யுத்தம் நடத்தினர்கள். அதில் ஈசர் ஒரு கால்தூக்கி ஊர்த்துவ தாண்டவம் புரியவே காளி வெட்கி நின்றுவிட்டாள். தோல்வியுற்றுச் செருக்கடங்கினள். அதாவது சக்தி சமயமானது சாந்த சைவமாயிற்று.

இனித் தமிழ் புராணங்களிலும் நாட்டுக் கதைகளிலும் வழங்கும் மற்றெரு சரிதம் இங்கு உண்டு. அது பழையனூர் நீலி கதை என்பது. பழையனூர் என்னும்

ஊர் திருவாலங்காட்டுக்கு ¾ கல் அளவில் உள்ளது. தேவாரத்தில் இவ்விரண்டூர்களும் சேர்த்தே கூறப்பட்டுள்ளன.

முன் ஒரு காலத்தில் ஒருவன் பரத்தையர் வசப்பட்டிருந்தான். அவனை நல்வழிப்படுத்த அவன் மனைவி முயற்சித்தாள். அவன் தன் மனைவியை அழைத்துக் கொண்டுஒருநாள் தம் சுற்றத்தார் வீட்டுக்குச் செல்லுகையில் வழியில் அவளைக் கொன்றுவிட்டான். அவள் நீலி என்ற பெயரொடு பேயானுள். மறுபிறப்பில் தன் மனைவியைக் கொன்றவன் ஒரு வணிகனுகப் பிறந்தான். ஒரு பெரியார் அவனை அணுகி உனக்கோர் பழிநேரப் போகிறது எனக்கூறி எப்போதும் வாளேந்திச் செல்க என எச்சரித்துச் சென்றார். அவன் வாணிபத்திற்காகப் பழையனூர் வழியாகச் சென்றான். வழியில் நீலி ஒரு மாயக் குழவியுடன் வந்து அவனைத் தொடர்ந்தாள். அவன் உணர்ந்து அவளொடு தொடர்பு வையாது சென்றான். நீலி என்ற பேயான பெண்மகளும் குழந்தையுடன் உடன் தொடர்ந்து ஊரணுகி பழையனூர்த் தலைவர் எழுபதின்மரிடம் சென்று இவன் தன் கணவன் என்றும், தன்னைவிட்டுப் பிரிந்துபோக எண்ணுகிறான் என்றும், அது பற்றித் தான் தொடர்ந்து வருவதாகவும் கூறினள். அவ்வேளாளத் தலைவர்கள் அவனை விசாரிக்க அவன் அங்ஙனமின்று என்றும், அஃதோர் பேய், தன்னைக் கொல்ல வருகின்றதென்றும் கூறினன். அவள் தான் அவன் மனைவியே என்பதற்கு அவன் குலமுறை கிளத்தியும், குழந்தையை அவன்பால்விட அது செல்லவும் முதலான காரணங்கொடு நிரூபித்தாள்.

அவ்வேளாளர்கள் உண்மையென நினைந்து ஓர் மண்டபத்திற்கு அவர்களைப் போயிருக்கச்சொன்னார்கள்.

அப்போது நீலி என்பாள் இவன்கொண்ட வாளால் என்னைக் கொல்லுவான் என நடுங்கினள். அதுகண்ட அவர் அவன் கையிலிருந்து வாளை கேட்க அவன் இவள்பேயே, என் கையில் வாள் இருக்கல் வேண்டும் எனப் பன்முறை கூறினன். வேளாளர்கள் 'உனது உயிர்போயின் எங்கள் எழுபதின்மர் உயிர் கொடுப்பேம் கவலற்க' என அவனை மண்டபத்திற் கனுப்பினர். அவன் சென்ற அளவிலே நீலி அவனைக் கொன்று வெளியேறி அவன் தாய்போல் வடிவுகொண்டு என் மகன் இங்கு வந்தனனே என வேளாளரிடம் வினவினள். அவ்வேளாளர்கள் சென்று மண்டபத்தில் பார்க்க அவன் இறந்து கிடந்ததைக் கண்டு கவன்று அவனுக்குக் கூறிய உறுதிப்படி தீ வளர்த்து எழுபதின்மரும் எரியில் மூழ்கினர் என்பது நீலி கதையாம். இதனை முன்பின் மாற்றியும் வழங்குவர்.

இக்கதைக் கறிகுறியாக குளக்கரையில் இரண்டு சதுரக்கல்லின்பேரில் ஒரு பெரிய சதுரக்கல் இருக்கும் கோயிலைக் காட்டுகிறார்கள். அதன்மேல் குழாங்கற்களை யாவரும் இடுவதுண்டு, அங்ஙனமுள்ள கற்களை மனைவியின்றாய் குழக்கட்டைசெய்து அனுப்பினள் என்பர்.

ஆலங்காட்டிற்கும் பழையனூர்க்கும் நடுவில் கோடாலிக்குட்டை என்ற குட்டையின்கரையில் 4 கற்கள்கொண்ட ஒரு சதுர ஆலயம் இருக்கிறது. இக் கற்களில் அநேக உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அவற்றை எழுபது வேளாள வீரரின் உருவங்கள் என்பர். அக்கோயிலை நீலி கோயில் என்பர்.

அதற்கு எதிரே ஒரு பாழடைந்த சிவாலயம் ஒன்று இருக்கிறது. அங்குள்ள இலிங்கத்தின் பெயர் அம்மையப்பர். அதனை வணிகன் அழுது தொழுதனன் என்பர். மற்றொரு சிறுகோயிலைத் தீப்பாய்ந்ததை விளக்குதற்காக

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: -436846)

திப்பாய்ந்த அம்மன் கோயில் என்பர். பழையனூர் நீலி கதைபோல கன்னட நாட்டில் தொண்டனூர் அரக்கிக் கதையென ஓர் கதை வழங்குகிறது. பழைய னூர் நீலிக் கதை மிகப் பழமையானது. இதனைத் திருத்தொண்டர் புராணத்தில்,

" நற்றிறம்புரி பழையனூர்ச் சிறுத்தொண்டர் நவைவந்
துற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
சொற்ற மெய்மையுந் தூக்கி அச்சொல்லையே காக்கப்
பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டைநாடு"

எனச் சேக்கிழாரும், சேக்கிழார் புராணத்தில்,

" மாறுபடு பழையனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்பத் தாங்கள்
கூறியசொல் பிழையாது துணிந்து செந்திக்
குழியிலெழு பதுபேரும் முழுகிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திரு வாலங்காட் டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின்கீழ்மேவப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிறித்தளவிட் டிவளவெனப் பேசலாமோ "

என உமாபதிசிவமும், தேவாரத்தில்

' வஞ்சப்படுத் தொருத்தி வாணாள்கொள்ளும் வகைகேட்டு
அஞ்சும் பழைய னூர் '

எனத் திருஞானசம்பந்தரும் குறித்தமையறிக.

சரித்திரம் : இவ்வாலயம் மிகப்பழமையானது. மற்ற ஆலயங்களைப்போலவே சிறிது சிறிதாகக் கட்டடங்கள் சேர்க்கப்பட்டுப் பெரிதானது. ஆரம்பத்தில் ஆலமரக் காட்டில்சிறுகோயிலாகத் திகழ்ந்தது. பின்னர் பெரிதாக, பற்பல அடியார்களும் அரசர்களும் கட்டினர். அறுபத்து

மூன்று அடியார்களுள் பெண்ணடியாராய்ச் சிறந்து விளங்கின காரைக்காலம்மையார் துறவு பூண்டு இறுதியில் முத்தி பெற்றது இஃதாகும்.

காரைக்காலில் வணிக குலத்துத் தனதத்தனுக்கு அருந்தவப் பேற்று மகளாய்ப் புனிதவதியார் என்ற பெயரினராய்த் தோன்றினவர் காரைக்காலம்மையார். மொழிபயின்ற காலத்தும் முன்னவன் வழிபாடொடு காதலுடையார். பின் நாகைப் பரமதத்தனுக்கு மனைவியானார். இல்லறம் ஒழுங்காக நடத்தினார். அடியார்க்கு அமுதும் ஆடையும் உதவினார். ஒருநாள் பரமதத்தனைக் காண வந்தோர் கையுறையாக இரு மாங்கனி தந்தனர். அவன் அவற்றை வீட்டுக்கனுப்பினன். அச்சமயம் வந்த அடியார்க் கமுதூட்டிய அம்மையார் ஒரு மாம்பழத்தைக் கொடுத்தார். பின்னர் வந்த கணவனுக்கு உணவிடுங்கால் இருந்த பழமொன்றை இட்டார். அவன் அதன் இன்சுவை கண்டான். மற்றொன்றும் வினவ, எடுப்பார் போல் உட்சென்று இல்லாமையான் இறைவனை வேண்டினார். இறைவனருளால் பழம் கையில் வரக் கொண்டு வந்து கொடுத்தார். அருட் பழம் உண்ட அவன், அதினின் சுவையாதல் கண்டு அதனொடு வந்ததா அன்றி வேறா என வினவினன். அம்மை உண்மை உரைக்க, உண்மையாயின் வேறொன்று தருக எனக் கூறினன். அவ்வாறு வேண்ட, வேண்டுவ தருவானும் மற்றொரு பழம் கொடுத்தான், அம்மையார் கொடுக்கவும் அவன் கண்டான் ; எழுந்தான் ; அவளடியில் தெய்வமென விழுந்தான்.

பின் வாணிபத்திற்கு வேற்றூர் சென்றவன் மதுரையடைந்து வேறொரு மாதினை மணந்து அங்கே தங்கி

*

விட்டான். அங்குப் பிறந்த பெண் குழந்தைக்குத் தன் முதன் மனைவி பெயராய புனிதவதி என்ற பெயரையே இட்டான். கணவன் வருவன் என்று எதிர் பார்த்த புனிதவதியார் வாராதது கண்டு விசாரிக்கப், பாண்டி நாட்டிலுள்ளமை யறிந்து அங்குச் சென்றனர். அவன் தன் மனைவி மகளுடன் வந்து வணங்கி அவள் தெய்வ மாதல் ஆண்டுளார்க் கறிவித்தனன். உடனே கணவன் பொருட்டுக் கொண்ட நாற்றச் சதை கழிவ தாக என உதறிப் பேயாகிக் கைலையப்பனைக் கண்ணுற் காணத் தலையால் நடந்தனர் காரைக்காலம்மையார். ஈசன் மகிழ்ந்து 'அம்மையே வா' என்ன காரைக்கா லம்மை 'அப்பா' என்றவனடி சேர்ந்து வேண்டுகிறார்.

"இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமைவேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான்மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின் கீழ்இருக்க" என்றார்.

ஈசன் தெற்கே ஆலங்காடு என நாம் விரும்பும் தலம் ஒன்றுண்டு. அங்கே நம் நடனம் கண்டு மகிழ்ந்திருக்க என அருள் புரிந்தனர். அங்ஙனம்

"கூடுமா றருள் கொடுத்துக் குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர் நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும்நீகண் டானந்தஞ் சேர்ந்தெப்போதும்
பாடுவாய் நம்மை என்றான் பரவுவார் பற்றாய் நின்றான்'

என்ன அம்மையார் ஆலங்காடடைந்தார்.

"கொங்கை திரங்கி' என்பதும் "எட்டியிலவம் மீகை" என்பதும் பாடி சிவானந்தத்து மூழ்கினார் என்பது காரைக்காலம்மையார் வரலாறு.

பேரூர் போன்ற திருத்தலங்களில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியின் அடிக்கீழ் காரைக்காலம்மையாரின் உருவத்தைக் காணலாம். ஆனுல் இத்தலத்தின் அங்ஙனமின்று. அம்மையாரின் சிலேயும் உற்சவ வடிவமும் தனியே இருக்கக் காண்கிறோம்.

பின் ஆறு, ஏழாம் நூற்ருண்டில் அப்பரும் சம்பந்தரும் ஒன்பதாம் நூற்ருண்டில் சுந்தரரும் இத்தலத்தைத் தரிசித்தார்கள். அதுகாலே காரைக்காலம்மை காலால் நடக்க அஞ்சி தலேயால் நடந்த தலமாயிற்றே, நாம் மிதிக்கலாகாதே எனக் கருதி ஆலங்காட்டின் அயலிலிருந்தே திருப்பதிகங்கள் பாடியருளினுர்கள். பாடிய பதிகங்கள் நான்காகும்.

பிற்காலத்தில் கோயிற்றிருப்பணி செய்த பல அரசர்களும் தத்தங் கைங்கரியங்கள் தானங்கள் இவைகளேக் கல்வெட்டுகளில் பொறித்துள்ளார்கள். அவைகளில் சரிதச் சுருக்கம் வருமாறு :—

திருவாலங்காட்டின் சரித வரலாற்றை அறிவதற்கு ஒரு சிறந்த செப்பேடும் நாற்பத்தெட்டு கல்வெட்டுகளும் உதவுகின்றன. செப்பேடு ராஜேந்திரச் சோழன் காலத்தில் பொறிக்கப்பட்டது. அதில் 31 ஏடுகள் உள்ளன. அவை 8 மணங்கு 2 வீசை 20 பலம் நிறையுள்ளவை. அவைகளில் பத்து ஏடுகள் வடமொழியிலும் 21 ஏடுகள் தென்மொழியிலும் எழுதப்பட்டுள்ளன. பத்தாவது ஏட்டில் எஞ்சியிருந்த பாகத்தில் பிற்காலத்திய எழுத்தால் அம்மனுக்குத் தந்த ஒரு தானத்தைக் குறித்து 21 வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. இச்செப்பேடு வெளியிட்ட அதிகாரியின் பெயரும் குறிக்கப்பட்டுள்ளது. இரு பாகங்களும் வெவ்வேறு காலத்தில் பொறிக்கப்பட்டன

வாகத் தெரிகின்றது. வடமொழியில் 130 சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன. அவைகளை இயற்றினவர் சங்கரன் மகன் நாராயணன் என்ற கவிஞர். தமிழில் எழுதப்பட்டுள்ளது 524 அடிகளைக் கொண்டது. பொறித்தவர்கள் காஞ்சி நகரத்துச் சிற்பிகள். இவ்விரண்டு பாலினுள்ளும் திருவாலங்காட்டுச் சிவாலயத்திற்குப் பழையனூர் கிராமத்தைத் தானம் செய்த செய்தி கண்டிருக்கிறது. அது ராஜேந்திரச் சோழன் I. 6-வது ஆண்டில் அதாவது 1017 கி. பி. யில் செய்யப்பட்டது. இப்பெயர்பெற்ற செப்பேடுகளை இப்பொழுதும் சென்னைக் கண் காட்சிக் சாலையில் (Museum) காணலாம்.

வடமொழியில் உள்ளவை சோழருடைய வம்ச பரம்பரையைப்புராண காலத்திலிருந்து ராஜேந்திரச் சோழன் காலம் வரை கூறுகின்றன. புராணக்கதைகள் நீங்கலாகச் சரித்திரபாகம் பெருநற்கிள்ளி, கரிகாற் சோழன், கோச்செங்கணன் முதற்கொண்டு தஞ்சையைப்பிடித்த விஜயாலயன், ஆதித்தன் I, பராந்தகன் I, ராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன், பராந்தகன் II எனும் சுந்தரச் சோழன், ஆதித்தன் II, அருண்மொழித் தேவன் எனும் இராஜராஜன், மதுராந்தகன், இராஜராஜச் சோழன், இராஜேந்திரச் சோழன் முதலியவர்களுடைய வீரச் செயல்கள் குறிக்கப் பட்டுள்ளன. இராஜேந்திரச் சோழன் பாண்டிய கேரள நாடுகளைவென்றதும் கங்கைக் கரையில் வசித்த மன்னர்கள்மீது படையெடுத்ததும் முதலான செய்திகளைக் குறிக்கின்றன. இனி, தென்மொழியில் கண்டபாகம் அதே செய்திகளைக் கூறுவதன்றித் தானங்கொடுத்த கிராமத்தின் எல்லைகளையும் உரிமைகளையும் எடுத்துக் கூறுகின்றது.

இச்செப்பேட்டுச் சாசனமானது மிகவும் முக்கியமானது, சோழர் வம்ச சரிதத்தின் உண்மையை முதல் முதல் அறிவித்தற்கு இச்சாசனமே ஆதாரமாக இருந்தது. பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் எல்லாம் இச்செப்பேட்டிற் கண்ட செய்திகளை வற்புறுத்துகின்றன.

இனி கல்வெட்டுகளில் கண்ட செய்திகளைச் சுருக்கமாகக் கூறுவோம்.

1. அரசர்கள் :—கங்கபல்லவர்கள் காலத்துச் கல்வெட்டுகள் 2 உள்ளன. அவைகள் நிருபதுங்கன், 11, 15 ஆண்டுகளில் பொறிக்கப்பட்டவை. சோழர்கள் பரம்பரையில் ராஜராஜன் காலத்து 8, 11, 22 ஆண்டுகளில் மூன்றும், ராஜேந்திரன் காலத்து இரண்டும், ராஜாதிராஜன் காலத்து 14-ம், குலோத்துங்கன் காலத்தவை இரண்டும், விக்கிரமசோழன் காலத்து 4-ம், குலோத்துங்கன் III காலத்து 3-ம், பெயரில்லாதவை 5-ம் உள்ளன. பாண்டியர்களில் ஜடாவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தது ஒன்றும், சிற்றரசர்களில் விஜயகண்ட கோபாலனுடையதொன்றும், கன்னடியர்களில் சாளுவ திப்பையனுடையதொன்றும், விஜயநகரத்தரசர்களில் கெம்பண்ண உடையான், தேவராயன், மல்லிகார்ச்சுனன், கிருஷ்ணதேவராயன், சதாசிவராயன், திருமலைய தேவன் முதலியவர் காலத்தியனவும் உள்ளன.

இவைகளில் பெரும்பாலும் ஆலயத்திற்குச் செய்த தானதருமங்களின் குறிப்புக்களைக் காண்கிறோம். என்றாலும் கோட்டம், நாடு. கிராமம் இவைகளின் பெயர்களும் தெய்வங்களின் பெயர்களும் தானஞ் செய்தோரின் பெயர்களும் மற்றுஞ் சில சரித்திரச் செய்திகளும் குறிக்கப்பட்டுள்ளன.

| 1906 கல்வெட்டுகள் | கிராமம் | நாடு | கோட்டம் |
|---|---|---|---|
| 453 | ஊற்றுக்காடு எனும் அழகிய சோழநல்லூர் ... | | ஊற்றுக்காட்டுக் கோட்டம் |
| 454 | பழையனூர் ... | மேன்மலை பழையனூர் நாடு ... | வடகரை மணவிற் கோட்டம் |
| 455 | போளிப்பாக்கம் ... | நடுவுமலை பெருமூர் நாடு. | |
| | திருமயிலாப்பில் ... | | புலியூர்க் கோட்டம் |
| 456 | மெடுவூர் ... | நடுவுமலை பெருமூர் நாடு. | |
| | நித்தவினோத சதுர்வேதி மங்கலம் | மேன்மலை வேலூர்நாடு... | |
| 458 | கள்ளிக்குடி ... | புறப்பரலை நாடு ... | |
| 459 | மணவில் ... | மணவில் நாடு ... | மணவில் கோட்டம் |
| | திருவாலங்காடு ... | பழையனூர் நாடு ... | |
| 460 | பெருமுலையூர் ... | காக்கலூர் நாடு ... | ஈக்காட்டுக் கோட்டம் |
| | புல்வேலூர் ... | | எயில் கோட்டம் |
| 466 | கோட்டூர் எனும் சோழவித்தியாதர நல்லூர் | | |
| | இலம்பையங் கோட்டூர் ... | கன்றூர் நாடு ... | மணவிற் கோட்டம் |
| 467 | பெருமூர் ... | பெருமூர் நாடு ... | |
| 477 | { வள்ளுவன் பாக்கம் ... | ஒழுகையூர் நாடு ... | படுவூர்க் கோட்டம் |
| | { பெருமூர் ... | நடுமலை நாடு ... | |
| 479 | திருவாலங்காடு ... | சந்திரகிரி ராஜ்யம் ... | |
| 481 | பழையனூர் ... | பழையனூர் நாடு ... | மணவிற் கோட்டம் |
| 452 | அரும்பாக்கம் ... | இல்லத்து நாடு ... | |

மேற்கூறிய பட்டியிலிருந்து திருவாலங்காடு மணவிற் கோட்டத்தில் பழையனூர் நாட்டில் பழையனூரில் உள்ள ஒரு ஊர் என்று ஏற்படுகிறது. மணவிற் கோட்டத்தில் உள்ள மற்ற ஊர்கள் இலம்பையங் கோட்டூர், மணவில் முதலியன. மணவில் என்பது இப்பொழுது மணவூர் என்று வழங்குகிறது. இலம்பையங் கோட்டூர் கூவத்தருகில் ஓர் பாடல்பெற்ற தலம். புலியூர்க் கோட்டத்து மயிலாப்பில் என்பது தற்காலத்து மயிலாப்பூராகும். இவ்வாலயத்துக் கல்வெட்டுக்களால் 9 கோட்டங்களின் பெயர்களை அறிகின்றோம்.

இனி அக்காலத்துப் பெரியார்களின் பெயர்களையும் அறிகின்றோம். அவைகளாவன : மனுமசித்தி (452), திக்கரசன் விசையதேவன் (461, 463), இலங்காபுர தண்டநாயகன் (465), அம்மையப்ப பழியஞ்சி பல்லவ ராயன் (468), அமரம் திம்மையங்கார் (473), பழையனூருடையார் (474), தர்ம சிவாசாரியார் (476), (479), ஆரியப்ப தண்ட நாயகன் (479), மலன உடையார் (480), வத்சராஜன் (482), ராஜேந்திர சோழன் மூவேந்த வேளான் (493).

மேற்கூறிய பெயர்களில் இரண்டு பெயர்கள் கவனிக்கத்தக்கவை. இலங்காபுர தண்டநாயகன் பாண்டியர்களுள் அரசுரிமைச் சண்டை ஏற்பட்ட காலத்தில் இலங்கையிலிருந்து வந்த படைத்தலைவன் பெயராம். தர்மசிவாசாரியார் இந்நாட்டிலிருந்த ஒரு மடத் தலைவரின் பெயராம். இப்பொழுதும் அம்மடம் இருக்கிறது. வைசியகுல பேரி செட்டிமார் ஆயிரவர்கள் எனப்படும் செட்டிமார்களுக்குத் தர்மசிவாசாரியார் குருவாகக் கருதப்படுகின்றார். இச்செட்டிமார்கள் முன்னர் வியாபார

முறையில் ஊர்தோறும் சென்று பேரிகை அறைவித்துக் கொண்டு வந்த பொருள் இன்னனவெனவும் அவையிற்றின் விலை இத்துணையெனவும் கூறி வாணிபம் செய்தமையின் பேரி செட்டிமார்கள் என வழக்கத்தில் நிலவ நேர்ந்தது.

**மற்ற முக்கிய குறிப்புக்கள்:**—சோழர்கள் காலத்தில் வரி விதிப்பதற்காக நிலங்களை அளந்தது. சோழனுடைய தேவி ஆலயத்துக்குத் தானம் செய்தது (460); 13-வது நூற்றாண்டின் பாண்டியர் வம்சத்தில் ஏற்பட்ட கலகத்தில் சோழ நாட்டரசன் தலையிட்டு இரண்டு படைத் தலைவர்களை அனுப்பியது (465); இவ்வாலயத்தில் ஒரு மண்டபம் கட்டியது(468); தர்மசிவாசாரியர் மடம் இவ்வூரிலிருந்தது (466); (477), குலோத்துங்கன் III-வது காலத்தில் மகாபாரதத்தைத் தமிழில்மொழிபெயர்த்தது; இதை மொழிபெயர்த்தவர் பெயர் குறிக்கப்பட்டது. இக்காலத்து நமக்குக் கிடைத்துள்ளவை பெருந்தேவனார், வில்லி, நல்லாப் பிள்ளை இவர்களுடையனவே. ஆகவே, கல்வெட்டிற் கண்ட பாரதம் மறைந்தது போலும். ஆலயத்தில் உள்ள துவஜஸ்தம்பத்தைச் சாளுவதிப்பின் என்ற சிற்றரசன் கட்டியது (498); சுவாமியின் பெயர் அம்மையப்பன் இன்னதென்றும், அம்மன் பெயர் வண்டார்குழல்நாச்சியார் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. செப்பேட்டில் அம்மைநாச்சியார் என்று இருக்கிறது.

**திருவாலங்காட்டுச் செப்பேட்டின் சில முக்கிய பகுதிகள்**

1-15. " ஸ்வஸ்திஸ்ரீ கோநேர் இன்மை கொண்டான் ஜயங்கொண்ட சோழ மண்டலத்து மெல்மலைப் பழையனூர் நாட்டு நாட்டார்க்கும் ப்ரஹ்ம (பிரம்ம) தேயக் கிழவர்க்கும் தேவதானப் பள்ளிச் சந்தக்கணி முற்றூட்டு

வெட்டிப்பெற்றுப் பழவறச் சாலா போக முள்ளிட்ட ஊர்களிலார்க்கும் நகரங்களிலார்க்கும் நமக்கு யாண்டு ஆருவது நாள் எண்பத்தெட்டினுல் நாம் முடிகொண்ட சோழபுரத்து நம் வீட்டினுள்ளால் கருமாளிகை மதுராந் தக தெவளில் தெற்கில் மறைவிடத்து இருந்து நடுவில் மலைப் பெருமுர்னுட்டுச் சிங்களாந்தகச் சருப்பெதி மங்கலத்துச் சவையார்க்கு ஸ்ருஹ ஜெயமாய் வருகின்ற மெல்மலைப் பழையனூர் நாட்டுப் பழையனூரின் தலை மாறு இச்சிங்களாந்தகச் சருப்பெதி மங்கலத்துக் சபை யார்க்கு ஊர் குடுப்பதாக இப்பழையனூர் யாண்டு ஆரு வது முதல் வெறு முதலாய் இவ்வூரால் சிங்களாந்தகச் சருப்பெதி மங்கலத்தொடுங்கூட இறைகட்டின பொன் ஐந்நூற்றுத் தொண்ணூற்றென் கழஞ்செ குன்றியும்;"

131-" திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையும் சீர்த்தனித் செல்வியும்
தங்பெருந் தேவிய ராகி இன்புற
நெடிதிய ஊழியுள் இடைதுறை நாடும்
துடர்வன வேலிப் படர்வன வாகியும்
சுள்ளிச் சூழ்மதிட் கொள்ளிப் பாக்கையு
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகட லீழத் தரைசர்த முடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திர னரமும்
தெண்டிரை யீழ மண்டல முழுவதும்
எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையுஞ் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவல் பல்பழந் தீவும்

மாப்பொரு தண்டாற் கொண்ட
கோப்பர கெசரி வந்மரான ஸ்ரீராஜெந்திர சோழ தெவற்கு யாண்டு.''

*426-46.* "ஆக இவ் இசைத்த பெருநான் கெல்லையுள்ளும் அகப்பட்ட நீர்நிலனும் புன்செய்யும் ஊரும் ஊரிருக்கையும் மனையும் மனைபடப்பையும் மன்றும் கன்றுமெய் பாழுங் குளமுங் கொட்டகமும் புற்றுந் தெற்றியும் காடும் பிடிலிகையுங் களருமுவரும் ஓடையும் உடைப்பும் ஆறும் ஆறிடு படுகையும் மீன் பயில் பள்ளமும் தென்பயில் பொதும்பும் மேனெக்கிய மரமும் கீழ்னோக்கிய கிணறும் கிடங்குங் கேணியும் ஏரியும் எரிநீர்கோப்பும் உள்ளிட்டு நீர்பூசி நெடும்பரம்பெறிந்துடும்பொடி யாமைதவழ்ந்த தெவ்வகைப்பட்டது முண்ணிலமொழிவின்றித் தேவதானமாகப் பெற்றதற்குப் பெற்ற பரிஹாரம் நாடாட்சியும், ஊராட்சியும் வட்டிநாழியும் புதர்நாழியும் வண்ணாரப் பாறையும் கண்ணலக் காணமுங் குசக்காணமும் இடைப் பாட்டமுந் தறியிறையும்தரகுந் தட்டாரப் பாட்டமு மன்றுபாடும் மாவிறையுந் தீயெரியும் விற்பிடியும் வாலமஞ்சாடியுங் நல்லாவுங் நல்லெருதுங் நாடுகாவலும் ஊடுபொக்கும் இலைக் கூலமு நீர்க்கூலியும் உல்கு ஓடக்கூலியுமுட்பட்டுக்கொத்தொட்டுண்ணற்பாலதெவ்வகைப்பட்டதுங் கொக்கொள்ளாதெ இத்தேவரெ கொள்ளப் பெறுவதாகவும் இப்படி பெற்றதற்குப் பெற்ற வ்யவஸ்தை இவ் வூர்க்கு நீர்க்கீந்தவாறு வாய்க்கால் குத்தி நீர்பாச்சப் பெறுவதாகவும் அவ்வாய்க்கால் அன்னியர் குறங்கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவும் குற்றெத்தம் பண்ணவும் கூடைநீர் இறைக்கவும் பெருததாகவும் சென்னீர்ப் பொதுவினை செய்யாததாகவும் அன்னீரடைத்துப் பாச்சப் பெறுவதாகவும் புறவூர் நிலத்தூடு பொந்து இவ்

வூர்க்கு நீர்பாயும் வாக்கால்களுங் குமுழிகளும் மேனடை நீர்பாயவும் வாரவும் பெறுவதாகவும் இவ்வூர் நிலத்தூடு போய் புரவூர்க்கு நீர்பாயும் வாய்க்கால்களும் குமிழி களும் மேனடை நீர்பாயவும் வாரவும் பெறுவதாகவும் சுட்டொட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும் துரவு கிணறு இழிச்சப் பெறுவதாகவும் காவுதெங்கிடப் பெறுவதாகவும் மருவுந் தமனகமும் இருவேலியுஞ் சண் பகமுஞ் செங்கழுநீரும் மாவும் பலாவும் தெங்குங் கமுகு முள்ளிட்ட பல்லுருவிற்பயன் மரம் இடவுங் நடவுங் பெறு வதாகவும் பெறுஞ் செக்கிடப் பெறுவதாகவும் இவ்வூர் எல்லைவட்டத்துள்ள தெங்கும் பனையும் ஈழவரேறப் பெறுததாகவும் இவ்வூரேரி நீரேற்குமளவும் எற்றுக்கொ க்குமளவுங்கொக்கத் தன்னெல்லையிற் கரையட்டிக்கொள் ளப் பெறுவதாகவும் இப்படிப்பட்ட வ்யவஸ்தையும் பரி ஹாரமும் பெறத் திருவாலங்காடுடைய மஹா தேவர்க்கு யாண்டு ஆருவது முதல் தேவதானமாகப் பிடி சூழ்ந்து படாகை நடந்து கல்லுங் கள்ளியுநாட்டி அறவோலை செய்து குடுத்தோம்.''

**திருப்பணிகள்** :—சென்ற ஒன்றிரண்டு நூற்றுண்டு களாக இத்தலத்தின் நிர்வாகம் கார்வேட்டி (காடு வெட்டி) நகரத்துப் பிரபு வமிசத்திற்குச் சென்றது. சமீ பத்தில் அதன் திருப்பணிகளை நகரத்தார் குலத்துதித்த P. M. A. வீட்டார் செய்தனர். கும்பாபிடேகம் நடந் தது. ஆனுல் அவரது நிலைமை விவகாரத்துக் குட்படவே திருப்பணி நின்று விட்டது. இப்போது வெளித்தோற் றம் மிகப் பரிதாபமான நிலையில் இருக்கிறது.

ஆலயத்தில் உட்பாகமாகிய கருப்பக்கிருகம், அர்த்த மண்டபம், நடனசபை முதலியவைகளையும்

உள்மதிலையும் நகரத்தார் திருப்பணி செய்தனர். பின்னர் ஈழ நாட்டிலிருந்து வந்த ஒரு துறவியார் தேர்த் திருப்பணியை ஆற்றினர். சுமார் ஒரு நூறாயிரம் வரை செலவு செய்து அருமையாகத் திருத்தேரும் தேர் கட்ட உயரிய மண்டபமும் கட்டியுள்ளார். இத்தேர் போன்ற அழகிய தேர் வேறிடத்துக் காணலரிது. திருக் குளத்திருப்பணி ஓர் சிறிதளவு ஓர் அன்பரால் நடத்தப் பட்டு வருகிறது. திருவாபரணங்கள் பல்லாயிரக் கணக் கானவை சுமார் 2½ ஆண்டிற்குமுன் களவாடப்பட்டன. துப்பு கிடைக்கவில்லை. பல திருப்பணிகள் இன்னமும் தேவை.

**ஆலய நிர்வாகம்** :—இவ்வாலயம் கார்வேட்டி நகரம் மன்னர்கள் ஆட்சிக்கு உட்பட்டிருந்து இப்போது இந்துமத பரிபாலன சங்கத்தினரால் நியமிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தாரால் பரிபாலிக்கப் பட்டுவருகிறது.

**சுற்று ஆலயங்கள்** :—காளிகோயில் சிவாலயத்திற்கு வடமேற்கில் உள்ள ஒரு சிறு ஆலயம். வடக்கு நோக்கி யது. கர்ப்பக்கிரகமும் அர்த்தமண்டபமும் கொண்டது. உட்பாகம் இருட்டாக இருக்கிறது. காளி உருவம் பெரி தாக இன்றி நடுத்தர அளவுடையது. உக்கிரம் இல்லை. பின்னால் மண்டபம் ஒன்றுண்டு. உற்சவர் பெரியகோயி லில் இருக்கிறது. பெரிய திருவிழாவில் முதற்பூசை இங்குத் தான் நடைபெறுகிறது.

**முஞ்சிகேசமுனி ஆலயம்**:—பெரிய ஆலயத்திற்கு வட புறம் உள்ள ஒரு சிறு கோயில் கல்லால் கட்டப்பட்டது. கும்பாபிஷேகத்தின் போது புதுக்கப்பட்டது. மூலத் தானத்தில் சடாரூபந் தரித்த முனி இருக்கிறார். இவருக் குத்தான் பெருமான் நடனஞ் செய்தது. இவ்வாலயத்தில்

விநாயகர் உண்டு. முதற்பூசை ஆலயத்திலும் இரண்டாம் பூசை தர்ம சிவாசாரியார் மடத்திலும் நடத்தப் பட்டு வருகிறது,

**திரௌபதியம்மன் கோயில்** :—இது கோயிலுக்குத் தென்மேற்கில் உள்ளது. இது கிராமப் பொதுக்கோயில். வன்னியர் பார்வையில் உள்ளது. இதற்கு ஒரு இலுப்புத் தோப்பும், 3 கலம் வரக்கூடிய 4 குழிநிலமும் உண்டு. உற்சவங்கள் ஊர்ச்சந்தாவில் நடைபெறுகிறது.

**பழையனூர்** :—இது திருவாலங்காட்டுக்குத் தென் கிழக்கில் ¾ கல் அளவில் உள்ளது. இவ்விருவூர்க்கு நடுவில் விளைவில்லா நிலமே உண்டு. ஊருக்கு மேற்கிலும் கிழக்கிலும் எச்சாத்தாள் கோயில் என்ற கன்னிகைமார் கோயில்கள் உள்ளன. ஊருக்கு மேற்புறத்துள்ள குட்டைக்குக் கிழக்கில் ஒரு பிள்ளையார் கோயிலும் ஒரு சிவாலயமும் இருக்கின்றன. சிவாலயத்துச் சுவாமியின் பெயர் தழுவக் கொழுந்தீசர். அம்மை பெயர் ஆனந்தவல்லி, இக் கோயிலில் ஒரு தூணில் காரைக்காலம்மையார் உருவம் இருக்கிறது. சுவாமி மேற்குச் சந்நிதி. ஊருக்குக் கிழக்கே கைலாச நாதர் கோயில் இருக்கிறது. இவ்வூர் திருப்பதி தேவஸ்தானத்து இனும் கிராமம். உற்சவத்தின் போது ஆலங்காட்டு நடராசர் இங்கு எழுந்தருளுவதுண்டு. இது சுந்தரர் குறித்த வைப்புத்தலம்.

**மணவூர்** :–பழையனூரிலிருந்து தெற்கில் 3 கல் அளவில் உள்ள ஊர். இவ்வூரில் இருப்புப் பாதை நிலயம் உண்டு. இவ்வூரில் சிவாலயமும் முருகப்பிரான் ஆலயமும் பெருமாள் ஆலயமும் உள. இவைகள் திருப்பதி தேவஸ்தானத்தார் கீழ் இருந்தன. சிவாலயம் பெரியது. விமானம் காஞ்சி கைலாச நாதர் விமா

னம் போன்ற வடிவு பெற்றது. ஆலயம் பழுது பட்டிருக்கின்றது. சுவாமி திருநந்தீசுவரர். அம்மை ஆனந்தவல்லி. திருக்குளம் எதிரில் இருக்கிறது. நடராச உருவம் அழகாகவும் வட்டமான பிரபை கொண்டும் உள்ளது.

இவ்வூர்களைப்பற்றி அடியிற்கண்ட பழமொழி உண்டு. அஃதாவது "ஆடினது ஆலங்காடு, அமர்ந்தது தக்கோலம், மணக்கோலங் கொண்டது மணவூர், சிலம்பொலித்தது சிதம்பரம்" என்பது.

**நூல்கள் :—**

1. காரைக்காலம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்தத் திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை அற்புதத் திருவந்தாதி (முதல் நூற்றாண்டு).

2. தேவாரம் - சம்பந்தர், (7 நூ), அப்பர் (7 நூ). சுந்தரர் (9 நூ).

3. பட்டினத்தார் பாடல் (10 நூ).

4. திருப்புகழ் - அருணகிரிநாதர்.

5. திருவாலங்காட்டுப் புராணம். வடமொழியிலும் தமிழ் மொழியிலும் உண்டு. தமிழில் இயற்றினார் இன்னாரென புலப்படவில்லை. விருத்தாசலம் தியாகராயக் கவிராயர் பதிப்பித்தார். (18 நூ).

6. தல மான்மிய அகவல் தியாகராயக் கவிராயர் இயற்றியது. தல மகிமை முழுதும் கூறுவது. (19 நூ).

---

குறிப்பு :-குலோத்துங்கன் III காலத்தில் பாரதத்தைத் தமிழில் மொழிபெயர்த்தவர் அரும்பாக்கத்து அறநிலை விசாகன் திரைலோக்கிய மல்லன் வத்ச ராசன் என்ற சைவ சமயத்தவர் என்று 482 - கல்வெட்டு கூறுகின்றது.

8045

Q1:38



சிவமயம்

# தோத்திரப் பாடற்றிரட்டு

## காரைக்காலம்மையார்

திருச்சிற்றம்பலம்

கொங்கை திரங்கி நரம்பெழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவயிற்றுப்
பங்கி சிவந்து பற்கள்நீண்டு
பரடுயர்நீள் கணைக்கா லோர்பெண்பேய்
தங்கி யலறி யுலறுகாட்டில்
தாழ்சடை யெட்டுத் திசையும்வீசி
அங்கங் குளிர்ந்தனல் ஆடுமெங்கள்
அப்ப னிடந்திரு ஆலங்காடே.

எட்டி யிலவ மீகை சூரை காரை படர்ந்தெங்குஞ்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற் பறைபோல் விழிகட்பேய்
கொட்ட முழவங் கூளி பாடக் குழக னடுமே.

—மூத்த திருப்பதிகங்கள்

கழற்கொண்ட சேவடி காணலுற் றார்தம்மைப் பேணலுற்றார்
நிழற்கண்ட போழ்தத்து நில்லா வினைநிக ரேதுமின்றித் [தூய்த்
தழற்கொண்ட சோதிச்செம் மேனியெம் மானைக்கைம் மாமலர்
தொழக்கண்டு நிற்கிற்கு மோதுன்னி நம்மடுந் தொல்வினையே.

தொல்லை வினைவந்து சூழாமுன் தாழாமே
ஒல்லை வணங்கி உமையென்னும் - மெல்லியலோர்
கூற்றானைக் கூற்றுருவங் காய்ந்தானை வாய்ந்திலங்கு
நீற்றானை நெஞ்சே நினை.

—திருஇரட்டைமணிமாலை

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர். 1

பெறினும் பிறிதியாதும் வேண்டேம் நமக்கி
துறினும் உருதொழியு மேனுஞ் - சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தி லொன்றாய நாம். 86

உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினாற் காரைக்காற் பேய்சொல் - பரவுவார்
ஆராத அன்பினோ டண்ணலைச்சென் றேத்துவார்
பேராத காதல் பிறந்து. 101

—அற்புதத் திருவந்தாதி

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

### பண் - தக்கராகம்

துஞ்ச வருவாருந் தொழுவிப் பாரும் வழுவிப்போய்
நெஞ்சம் புகுந்தென்னை நினைவிப் பாருமுனை நட்பாய்
வஞ்சப் படுத்தொருத்தி வாணாள் கொள்ளும் வகைகேட்
டஞ்சும் பழையனூ ராலங்காட் டெம்மடிகளே. 1

சாந்தங் கமழ்மறு கிற்சண்பை ஞானசம் பந்தன்
ஆந்தண் பழையனூ ராலங் காட்டெம் மடிகளை
வேந்த னருளாலே விரித்த பாடலிவை வல்லார்
சேர்ந்த விடமெல்லாந் தீர்த்த மாகச் சேர்வாரே. 11

—முதற்றிருமுறை

## திருநாவுக்கரசு நாயனார்

### திருநேரிசை

வீட்டினார் சுடுவெண் ணீறு மெய்க்கணிந் திடுவர் போலும்
காட்டினின் றாடல் பேணுங் கருத்தினை யுடையர் போலும்
பாட்டினார் முழவ மோவாப் பைம்பொழிற் பழனைமேயார்
ஆட்டினா ரரவந் தன்னை யாலங்காட் டடிக ளாரே. 6

—நான்காந் திருமுறை

### திருத்தாண்டகம்

அல்லும் பகலுமாய் நின்ருர் தாமே
யந்தியுஞ் சந்தியு மாஞர் தாமே
சொல்லும் பொருளெலா மாஞர் தாமே
தோத்திரமுஞ் சாத்திரமு மாஞர் தாமே
பல்லுரைக்கும் பாவெலா மாஞர் தாமே
பழனை பதியா வுடையார் தாமே
செல்லு நெறிகாட்ட வல்லார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. 5

—ஆருந் திருமுறை

## சுந்தரமூர்த்தி நாயஞர்

### பண் - பழம்பஞ்சுரம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமைபங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா வாலங் காடாவுன் னடியார்க் கடியே ஞவேனே. 1

பத்தர் சித்தர் பலரேத்தும் பரமன் பழைய னூர்மேய
அத்த ஞலங் காடன்ற னடிமைத் திறமே யன்பாகிச்
சித்தர் சித்தம் வைத்தபுகழ்ச் சிறுவ னூர ஞெண்டமிழ்கள்
பத்தும் பாடி யாடுவார் பரம னடியே பணிவாரே. 10

—ஏழாந் திருமுறை

## சேக்கிழார் நாயஞர்

இறவாத வின்ப வன்பு வேண்டிப் பின்வேண்டு கின்ருர்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்ருர். 60

ஆலங்கா டதனி லண்ட முறநிமிர்ந் தாடு கின்ற
கோலங்காண்பொழுதுகொங்கை திரங்கியென்றெடுத்துத்தங்கு

மூலங்கா ணுதார் தம்மை மூத்தநற் பதிகம் பாடி
ஞாலங்கா தலித்துப்போற்று நடம்போற்றி நண்ணுநாளில். 63

—காரைக்காலம்மையார் புராணம்

திருச்சிற்றம்பலம்

KOVILOOR MADALAYAM
KOVILOOR - 630 307
(NEAR) KARAIKUDI
(PHONE: 486846)

அருணகிரிநாதர்

கனவாலங் கூர்விழி மாதர்கள்
மனசாலஞ் சால்பழி காரிகள்
கனபோகம் போருக மாமிணை முலைமீதே
கசிவாருங் கீறுகி லாலுறு
வசைகாணுங் காளிம வீணிகள்
களிகூரும் பேயமு தூணிடு கசுமாலர்
மனவேலங் கிலக லாவிகள்
மயமாயங் கிதவி னோதிகள்
மருளாருங் காதலர் மேல்விழு மகளிர்வில்
மதிமாடம் வானிகழ் வார்மிசை
மகிழ்கூரும் பாழ்மன மாமுன
மலர்பேணுந் தாளுன வேயரு வருளாயோ
தனதானந் தானன தானன
எனவேதங் கூறுசொல் மீறளி
ததைசேர்தண் பூமண மாலிகை யணிமார்பா
தகரேறங் காரச மேவிய
குகவீரம் பாமும ராமிகு
தகைசாலன் பாரடி யார்மகிழ் பெருவாழ்வே
தினமாமன் பாபுன மேவிய
தனிமானின் தோளுட னுடிய
தினைமாவின் பாவுயர் தேவர்கள் தலைவாமா
திகழ்வேடங் காளியொ டாடிய
ஜெகதீசங் கேசந டேசுரர்
திருவாலங் காடினில் வீறிய பெருமாளே.

—திருப்புகழ்